# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 03.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். CP 1925/SCIC/2022</u>

திரு தெய்வசிகாமணி ... மனுதாரர்
எண்.267, ரமணிஸ் மயூரி
துடியலூர் ரோடு
சின்னவேடம்பட்டி
கோயம்புத்தூர் - 641 049

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் "C" பிரிவு
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் ... பொது அதிகார அமைப்பு
சென்னை - 600 028.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 06/02/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> ***பதிவுத்துறைத் துணைத் தலைவர், கோவை அவர்களால் 16/09/2022 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய தகவலை ஆணையம் பரிசீலனை செய்கையில் இனம் 7 மற்றும் 8-க்கு - " பதிவுத்துறை சட்டம் பிரிவு 22A-வை மீறி பதிவு நடைபெற்றிருக்கிறதா என்பதை உறுதி செய்ய மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) இரண்டு மாத கால அவகாசம் கோரியுள்ளதாகத்" பதிவுத்துறைத் துணைத் தலைவர், மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். எனவே, தற்போதைய பொது தகவல் அலுவலர் இறுதி தணிக்கை அறிக்கையினையும், அதன் மீது எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கையினையும் பெற்று இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்புவதோடு, அதன் பின்னர் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய ஒப்புகை அட்டையின் நகலை 19/03/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேலும், இனம் 9-க்கு***

*தற்போதைய பொது தகவல் அலுவலர், சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) அவர்களிடமிருந்து இறுதி தணிக்கை அறிக்கையினைப் பெற்று அதனை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு, சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்டம் ஆகியோருக்கு அனுப்பி பதிவுத்துறை சட்டம் பிரிவு 22A-வை மீறி ஏதேனும் முறைகேடுகள் நடந்திருப்பதாக தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால், அதில் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் கடிதம் அனுப்ப வேண்டுமென்றும், அதன் பின்னர், அவ்வலுவலர்களிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை 19/03/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்றும் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

*இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொது தகவல் அலுவலர் தெரிவிக்கையில், இவ்வழக்கில் சில சார்பதிவாளர்களுக்கு எதிராக துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். எனவே, எந்த அலுவலரால், எந்தெந்த அதிகாரிகள் மீது துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற பெயர் பட்டியலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்புவதோடு, அதன் பின்னர் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய ஒப்புகை அட்டையின் நகலை 19/03/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

*மனுதாரர், தனது 04/02/2025 தேதியிட்ட கடிதத்தில் ஆவணங்கள் மற்றும் தகுதியின் அடிப்படையில் இவ்வழக்கை முற்றாக்கம் செய்ய வேண்டுமென்று ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட உத்தரவினை ஆணையம் பிறப்பிக்கின்றது.*

2. மேற்குறிப்பிட்டவாறு அன்று (19/03/2025) திரு.அ.ஸ்ரீராம், சார்பதிவாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.M.முத்து பிரபாகரன், இளநிலை உதவியாளர், மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) அலுவலகம், கோயம்புத்தூர் ஆகியோர் ஆஜராகி, மனுதாரருக்கு 14/03/2025 தேதியிட்டு அனுப்பிய தகவலின் நகலையும், அதனை மனுதாரருக்கு அனுப்பி அன்னாரை சென்றடைந்ததற்கான அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதனைப் பரிசீலனை செய்கையில் இனம் 7 மற்றும் 8-க்கான தகவலைப் பொறுத்த வரையில், தணிக்கை அறிக்கையின் நகல் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை காணப்படவில்லை. எனவே, ஆணையம் உத்தரவிட்டவாறு மனுதாரருக்கு தகவல்களை அனுப்பப்படவில்லை என்பது தெரியவருகிறது. அதற்கு பொதுத் தகவல் அலுவலர்/ “C” பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்கள் மேலும் கால அவகாசம் கோரினார். கால அவகாசம் வழங்கிய ஆணையம், பொதுத் தகவல் அலுவலர்/ “C” பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்கள் இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் இனம் 7 மற்றும் 8-க்கான தணிக்கை அறிக்கையின் நகல் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

**குறித்த முழுமையான தகவல்களை ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினையும், மனுதாரரிடமிருந்து பெறப்படுகின்ற அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலையும் 03/04/2025 அன்று 03.30 பி.ப. மணிக்கு ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

மேற்குறிப்பிட்டவாறு இன்று (03/04/2025) திரு.A.ஸ்ரீராம், "C" பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்கள் ஆஜராகி 19/03/2025 தேதியிட்டு ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு 28/03/2025 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய முழு தணிக்கை அறிக்கை மற்றும் இறுதி ஆணை ஆகியவற்றின் நகலினையும், அத்தகவல் மனுதாரரை சென்றடைந்ததற்கான அஞ்சல் கண்காணிப்பு சான்றின் (Proof of postal tracking) நகலையும் ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். எனவே, இப்புகார் மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்./- (முகம்மது ஷகீல் அ்ஃதர்)**<br>
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## வழக்கு எண். CP 1925/SCIC/2022

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/<br>
கண்காணிப்பாளர் "C" பிரிவு<br>
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்<br>
சென்னை - 600 028.

**மனுதாரர்**

திரு தெய்வசிகாமணி<br>
எண்.267, ரமணிஸ் மயூரி<br>
துடியலூர் ரோடு<br>
சின்னவேடம்பட்டி<br>
கோயம்புத்தூர் - 641 049

RG/PC